செ.வெ.எண். 38/மார்ச் தேதி : 17.03.2017

**<u>தருமபுரி மாவட்டத்தில் வணிகவியல் குற்றப் புலனாய்வு பிரிவு சார்பாக போலி நிதி நிறுவன விழிப்புணர்வு முகாம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டிகங்காதர்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.</u>**



தருமபுரி மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் காவல் துறையின் வணிகவியல் குற்றப் புலனாய்வு பிரிவு சார்பாக போலி நிதி நிறுவன கண்டறிதல் விழிப்புணர்வு முகாம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டிகங்காதர்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பொருளாதாரா குற்றப்பிரிவு காவல்துறை கூடுதல் இயக்குநர் அவர்களின் உத்தரவின் பேரில் தருமபுரி மாவட்ட காவல் துறையின் வணிகவியல் குற்றப்புலனாய்வு பிரிவு சார்பாக போலி நிதிநிறுவன விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. மேலும் இக்கல்லூரி மாணவ, மாவணவியர்களிடம் அரசு பதிவு பெறாத போலி நிதிநிறுவனத்தில் பொதுமக்கள் தாங்கள் சேமித்த பணத்தை முதலீடு செய்து ஏமாறாமல் இருக்கவும், மிண்ணனு பணப்பரிமாற்றம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு சம்மந்தமாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த சுமார் 250 கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பதாகைகளுடன் அரசு கலைக் கல்லூரியிலிருந்து தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரையில் பேரணி நடத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வு முகாமில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், தேசிய தகவல் மைய அலுவலர் திரு. ரகுபதி, கூட்டுறவு சங்கங்களின் துணைபதிவாளர் திரு.பழனிசாமி, உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சோமசுந்தரம், வணிகவியல் குற்றப்புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி தமிழ்செல்வி, காவல் உதவி ஆய்வாளர் திருமதி. கோமதி மற்றும் காவல் ஆளினர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.